பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
17 03 2026 TUESDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளின் செயல்பாடுகள் பாராட்டுதலுக்குரியது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
- மாற்றியமைக்கப்பட்ட பயிர்க்காப்பீட்டு திட்டம், அதன் செயலாக்கத்தில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- நாடுமுழுவதும் சமையல் எரிவாயு தட்டுப்பாடின்றி விநியோகம் செய்யப்பட்டு வருவதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.
- ஆப்கானிஸ்தானில் உள்ள மருத்துவமனை மீது பாகிஸ்தான் நடத்தியுள்ள தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.
- ஸ்பெயின் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சந்தியா விஸ்வநாதன் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளின் செயல்பாடுகள் பாராட்டுதலுக்குரியது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

போதைப்பொருள் தடுப்பு பிரிவின் நிறுவன தினத்தை ஒட்டி வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பயன்பாட்டிலிருந்து இளையோரை பாதுகாக்கும் முக்கிய கடமையை இவர்கள் ஆற்றி வருவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

போதை பயன்பாடற்ற இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றும் வகையில் இந்த அதிகாரிகள் செயல்பட்டு வருவதாகவும் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

>>>>><<<<<

*மாற்றியமைக்கப்பட்ட பயிர்க்காப்பீட்டு திட்டம், அதன் செயலாக்கத்தில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்துள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.*

*இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இந்த திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகை குறித்த நேரத்தில் வழங்கப்படுவதாகவும் கூறினார்.*

*விண்ணப்பம் பெறப்பட்ட 21 நாட்களுக்குள் இழப்பீட்டு தொகை வழங்கப்படாவிட்டால், 12 சதவீத வட்டி வழங்கப்படுவதற்கான அம்சங்கள் இந்த திட்டத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*காலதாமதத்திற்கு மாநில அரசுகள் காரணமானால், சம்பந்தப்பட்ட அரசுகள் 12 சதவீத வட்டியை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்றும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.*

*>>>>><<<<<*

*மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிஜேபி தலைவர் திரு. நிதின் நபினுக்கு, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக, சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள பதிவில், புதிய பொறுப்பில் திரு. நிதின் நபின் தொடர் வெற்றிகளை பெற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*மக்களவை உறுப்பினர்கள் 8 பேரின் சஸ்பெண்ட் உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது. இதற்கான தீர்மானம், மக்களவையில் இன்று நிறைவேறியது.*

*>>>>><<<<<*

*மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் கவலை அளிப்பதாக உள்ளது என்று 204 ஓய்வுபெற்ற அதிகாரிகள் கூறியுள்ளனர்.*

*இதுதொடர்பாக, அவர்கள் பொதுமக்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், கடந்த 12ஆம் தேதி நாடாளுமன்ற வளாகத்தில் இவர்கள் செயல்பட்ட விதம், ஏற்புடையதல்ல என்று குறிப்பிட்டுள்ளனர்.*

இதற்காக, திரு. ராகுல் காந்தி மன்னிப்பு கோர வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நாடுமுழுவதும் சமையல் எரிவாயு தட்டுப்பாடின்றி விநியோகம் செய்யப்பட்டு வருவதாக எண்ணெய் நிறுவனங்கள் கூறியுள்ளன.

வீட்டு பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு தடையின்றி விநியோகம் செய்யப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஐ.ஓ.சி. கூறியுள்ளது.

இதுதொடர்பாக ஐ.ஓ.சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேவையின்றி சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவு செய்வதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு பற்றாக்குறை நிலவுவதாக பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் அந்த செய்திக்குறிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மேற்குவங்கத்தில் உயரதிகாரிகளை தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்திருப்பது, அதிருப்தி அளிப்பதாக உள்ளது என்று முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar-க்கு அவர் கடிதம் எழுதியுள்ளார்.

தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டவுடனேயே உயரதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் செல்வி. மம்தா பானரஜி அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குவங்க தலைமைச்செயலர், உள்துறைச் செயலர் மற்றும் காவல்துறை தலைவரை தேர்தல் ஆணையம் இடமாற்றம் செய்ததை அடுத்து, செல்வி மம்தா பானர்ஜி இந்த கடிதத்தை எழுதியுள்ளார்.

>>>>><<<<<

புதுச்சேரி மற்றும் தமிழக சட்டப்பேரவை தேர்தல்களை ஒரே தேதியில் நடத்த வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி சார்பில் தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை மனு வழங்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் நடைபெறும் ஏப்ரல் 23ஆம் தேதி, புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலை நடத்த வேண்டும் என்றும், அல்லது புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல் நடைபெறும் ஏப்ரல் 9ஆம் தேதி தமிழக சட்டப்பேரவை தேர்தலை நடத்த வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

தமிழகம், புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல்கள், இதுவரை ஒரே தேதியில் நடத்தப்பட்டு வந்ததாகவும் காங்கிரஸ் அந்த மனுவில் கூறியுள்ளது.

>>>>><<<<<

சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள கேரளாவில், ஐந்து உயரதிகாரிகளை இடமாற்றம் செய்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புதிய பொறுப்புகளை, நாளைக்குள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று கூறி, தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் இன்று மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக குறை கூறினார்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் நாள்தோறும் நடைபெற்று வருவதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

மாநிலத்தின் பிற பகுதிகளில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில், பிஜேபி, பாமக, அமமுக மற்றும் த.மா.கா கட்சி தலைவர்கள் பங்கேற்றனர்.

>>>>><<<<<

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 3 பேர் இன்று விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்டவர்கள் அனைவரும் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

பஞ்சாப் சட்டப்பேரவையில், ஸ்ரீ குரு தேஹ் பகதூர் சர்வதேச தரத்திலான பல்கலைக் கழகத்தை ஏற்படுத்துவதற்கான மசோதா நிறைவேறியது.

300 கோடி ரூபாய் செலவில் இந்தப் பல்கலைக் கழகம் அமைக்கப்படவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு, இணையதள பாதுகாப்பு மற்றும் விண்வெளி துறைகளில் இப்பல்கலைக் கழகம் சிறப்பு படிப்புகளை வழங்கும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் ஜூலை மாதம் முதல் இந்தப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அந்த மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

கர்நாடகாவில், சட்டப்பேரவை உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதில் அளிப்பதில் அமைச்சர்கள் காலதாமதம் செய்யக்கூடாது என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சித்தராமையா அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அமைச்சர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் எழுப்பியுள்ள ஏராளமான கேள்விகள், அமைச்சர்களின் பதிலுக்காக காத்திருப்பதை அவர் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தகைய செயல்பாடுகள் அரசுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் திரு. சித்தராமையா அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

ஆப்கானிஸ்தானில் உள்ள மருத்துவமனையின் மீது, பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியுள்ளதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் மறுவாழ்வு மையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஏராளமானோர் உயிரிழந்ததை நியாயப்படுத்த முடியாது என்று வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறியுள்ளார்.

இந்த தாக்குதலை ராணுவ நடவடிக்கை என்று பாகிஸ்தான் கூறுவது ஏற்புடையதல்ல என்றும் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

அமெரிக்காவில் அரசு திட்டங்களில் முறைகேடுகள் நடைபெறுவதை தடுப்பதற்கென சிறப்பு பணிக்குழு ஒன்றை அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் ஏற்படுத்தியுள்ளார்.

துணை அதிபர் திரு. J.D.Vance தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

நாகாலாந்து, மணிப்பூர், மிஸோரம் மற்றும் திரிபுரா மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று பலத்த காற்றுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஜார்க்கண்ட், ஆந்திரா, அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, பீகார், சத்திஷ்கட், ஹிமாச்சலப்பிரதேசம், மஹாராஷ்ட்டிரா, ஒடிசா, தெலங்கானா, மேற்குவங்கம் மற்றும சிக்கிம் மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அஸ்ஸாம் மற்றும் மேகாலயா மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் நாளை கனமழை பெய்யக்கூடும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஸ்பெயின் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சந்தியா விஸ்வநாதன் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டத்தில் அவர், 21-18, 21-18 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Arati Janoba Patil-ஐ வென்றார்.

>>>>><<<<<

*ஹாக்கி Nations கோப்பைக்கான ஆடவர் பிரிவு போட்டி, தென்னாப்பிரிக்காவில் ஜூன்மாதம் 11ஆம் தேதி தொடங்கி 20ஆம் தேதிவரையும், மகளிர் பிரிவு போட்டி நியூஸிலாந்தில் ஜூன் மாதம் 15ஆம் தேதி தொடங்கி 21ஆம் தேதிவரையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>END<<<<<*